மாலை முரசு

பக்கங்கள் 18+3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 04 செவ்வாய்க்கிழமை 18.03.2025 | அதிர்வு 227

## மாயமான மீனவர்களை தேடுகின்ற நடவடிக்கை துரிதகதியில் முன்னெடுப்பு

(எஸ். நிதர்ஷன்)

கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் காணாமல்போயுள்ள யாழ். குருநகர் பகுதியைச் சேர்ந்த இரண்டு மீனவர்களையும் தேடும் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# சிவமோகனின் மனு மீது வியாழன் மன்றின் முடிவு

## சிறீதரனின் பதில் மனுவுக்கு எதிராகவும் சுமந்திரன் இன்று மிகக் காட்டமான வாதம்







(ந.லோகதயாளன்)

தம்மை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்தி கட்சியின் மத்திய குழு எடுத்த முடிவுக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு உட்படக் கட்டளைகளை வழங்குமாறு கோரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் எஸ். சிவமோகன் தாக்கல் செய்த வழக்கின் மீது இடைக்காலக் கட்டளை தொடர்பான தனது முடிவை யாழ். மாவட்ட நீதிமன்றம் நாளைமறுதினம் வியாழக்கிழமை வழங்கும்.

இந்த வழக்கின் நான்காவது எதிராளியான சிறீதரன் மன்றில் தாக்கல் செய்திருந்த பதில் மனுவுக்கு எதிராகவும் மிகக் காட்டமான – சூடான வாதத்தை 04



# வடக்குக்கான நிதி ஒதுக்கீட்டை வினைத்திறனுடன் செலவு செய்க

## ஆளுநர் - அமைச்சர் கூட்டாகக் கோரிக்கை

வடக்கு மாகாணத்துக்கு அதிகளவான நிதி பல்வேறு வகையிலும் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றை வினைத் திறனாகவும், ஒருங்கிணைந்தும், விரைவாகவும் நிறைவேற்றுவது தொடர்பாக கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் இ.சந்திரசேகரர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோர் இணைத் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் இன்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. 02

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**வடக்குக்கான...**

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், வனவளத் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களத்தால் நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கும் பாதிப்பு இருந்தாலும் வடக்கு மாகாணத்தில் அதிகூடிய பாதிப்பு இருப்பதாகக் குறிப்பிட்டார்.

மக்களின் மீள்குடியமர்வு, விவசாயம், அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு இடையூறாக இந்த இரு திணைக்களங்களின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

வடக்கு மாகாணம் கால்நடை உற்பத்தித் துறையில் மிகச் சிறந்த நிலையில் உள்ளபோதும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இல்லாமல் இருப்பது பெரும் பின்னடைவு எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

சட்டவிரோதமான மணல் அகழ்வு மிகப்பெரிய பிரச்சினையாகவுள்ளது எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டும் எனவும், ஆளணிகள் மீளாய்வு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவித்த ஆளுநர் இது தொடர்பில் அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அமைச்சர் இ.சந்திரசேகர், மாகாண சபைக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், அனைத்துத் திணைக்களங்களும் ஒருங்கிணைந்து இதைச் செலவு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மேலும் வெளிநாடுகளிலிருந்து முதலீட்டாளர்கள் அதிகளவில் வருகைதரும் நிலையில் அவர்களுக்கு ஒத்துழைப்புக்களை அதிகாரிகள் வழங்க வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கினார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர், மாகாணத்துக்கான நிதி மூலங்கள் அதற்கான அனுமதிக்கான நடைமுறைகள் தொடர்பில் விரிவாகக் கூறியதுடன் இந்த ஆண்டு மாகாணசபைக்கு 7,328 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், தமது அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பாகவும் முன்னெடுக்கப்படவுள்ள வேலைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தினார்.

இதன் பின்னர் கல்வித்துறையிலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்களில் அநேகர் மேன்முறையீடு செய்துள்ளதாக ஆளுநர் மற்றும் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதன்போது ஆளுநரும், அமைச்சரும் இரு விடயங்களைச் சுட்டிக்காட்டினர்.

ஒருபோதும் வெளிமாவட்டங்களில் பணியாற்றாதவர்கள் வெளிமாவட்டங்களுக்குச் செல்லத்தான் வேண்டும் எனவும், அத்துடன் மேன்முறையீடுகளை ஒவ்வொன்றாக ஆழமாக ஆராயுமாறும் அவர்கள் இருவரும் குறிப்பிட்டனர்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் அதன் பின்னர் தமது அமைச்சு, திணைக்களங்களுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பில் விளக்கமளித்தார். மருத்துவமனைகளில் நிலவும் வெற்றிடங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

விவசாய அமைச்சின் செயலாளர் மற்றும் விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோர் நிதி ஒதுக்கீடுகள் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பில் தெரியப்படுத்தினர்.

வடக்கு மாகாணத்துக்குரிய சில சிறு பயிர்களுக்கு இலவச காப்புறுதி இன்னமும் இல்லை என்றும், அதைப் பெற்றுக் கொடுத்தால் விவசாயிகள் அதிகளவில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவர் எனவும் குறிப்பிட்டனர்.

அதேபோன்று உரமானியம் சிறு தானியப் பயிர்ச்செய்கைக்கும் வழங்கினால் விவசாயிகள் ஆர்வத்துடன் அதை முன்னெடுக்க உதவியாக இருக்கும் எனவும் தெரிவித்தனர்.

உள்ளூராட்சி அமைச்சின் செயலர், தமது அமைச்சால் இம்முறை முன்னெடுக்கபடவுள்ள டிஜிட்டல் மயமாக்கல் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளித்தார். அத்துடன் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின்ப பணிப்பாளர், அரசு ஒதுக்கியுள்ள விசேட நிதியில் முன்னெடுக்கப்படவுள்ள வீதிகளின் முன்னுரிமைப் பட்டியலையும் அவர் சமர்ப்பித்தார்.

இறுதியாக மகளிர் விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் வேலைத் திட்டங்கள் தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன் ஆகியோரும், பிரதம செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் – நிர்வாகம், நிதி, திட்டமிடல், பொறியியல் ஆகியோரும், அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களப் பணிப்பாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.










**மாயமான மீனவர்களை...**

நடவடிக்கை துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சின் ஊடகச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி மீனவர்கள் காணாமல் போயுள்ள விடயம் தொடர்பில் தமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து கடற்படையினர் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களப் பிரதானிகளுடன் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் அவசர கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

மீனவர்கள் தொடர்பில் தேடுதல் உடன் ஆரம்பிக்குமாறு ஆலோசனை வழங்கினார். இதற்கமைய தேடுதல் இடம்பெற்று வருகின்றது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சின் ஊடகச் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

46 வயதுடைய விமலேந்திரன் ஞானராஜ், 54 வயதுடைய பூலோகதாசன் ஆகியோரே கடந்த 15 ஆம் திகதி ஊர்காவற்றுறையிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் காணாமல்போயுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# தமிழரசுக் கட்சியில் இருந்து விலகும் வடமராட்சி கிழக்கு செயற்பாட்டாளர்

## வேட்பாளர் தெரிவில் எழுந்த முரண்பாட்டையடுத்து

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடமராட்சி கிழக்கு செயற்பாட்டாளரான பி.அலஸ்ரின் (றஜனி) கட்சியை விட்டு வெளியேறுவதாக அறிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் இன்று வெளியிட்ட பதிவின் ஊடாக இந்த விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் தனது தீர்மானத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரான எம்.ஏ. சுமந்திரனுக்கும் அவர் அறிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவருடைய முகநூல் பதிவில், ”18.03.2025 இன்று நான் உயிரிலும் மேலாக நேசித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியை விட்டு முற்றுமுழுதாக வெளியேறுகின்றேன்” – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடமராட்சி கிழக்கு, முள்ளியான் வட்டாரத்தில் வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாகஎழுந்தமுரண்பாடேபி.அலஸ்ரின் கட்சியை விட்டு வெளியேறுவதற்கான காரணம் என்று அறியமுடிகின்றது.

# வவுனியா வடக்கு பிரதேச சபையில் போட்டியிட வேட்புமனுவைத் தாக்கல் செய்த முன்னணியினர்



(கி.வசந்தன்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா வடக்கு பிரதேச சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி அதன் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட இன்று வேட்பு மனுவைத் தாக்கல் செய்தது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் நேற்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் வியாழக்கிழமை நண்பகல் வரை ஏற்றுக்கொள்ளப் படும்.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா மாநகர சபை உட்பட 4 சபைகளில் போட்டியிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி முதல் கட்டமாக வவுனியா வடக்கு பிரதேச சபைக்கான வேட்புமனுவை இன்று தாக்கல் செய்தது.

இதனைக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன், வேட்பாளர்களான சஞ்சு, தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோர் தாக்கல் செய்தனர்.

# சுகாதார தொழிற்சங்க நடவடிக்கையால் வவுனியாவில் நோயாளர்கள் பாதிப்பு!





(கி.வசந்தன்)

சுகாதார தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக வவுனியாவில் 600 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் சுகாதார தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக மருந்தகங்கள், ஆய்வகங்கள், கதிரியக்க சேவைகள், பொதுச் சுகாதாரம் மற்றும் குடும்ப நல சுகாதாரம், கண் மருத்துவ நடவடிக்கைகளில் ஈடுபடும் சுகாதாரப் பகுதியினர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் வவுனியாவிலும் பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக வவுனியாவில் பொது வைத்தியசாலைக்கு ஹெப்பிட்டிகொல்லாவ, பதவியா, உட்பட தூர இடங்களில் இருந்து வரும் 600 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் திரும்பிச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

குறிப்பாக வவுனியா பொது வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவுக்கு 600 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் உட்பட மொத்தமாக 1000 பேர் வரை நாளாந்தம் மருத்துவ தேவைக்காக வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**சிவமோகனின்...**

இன்று முன்வைத்தார் மற்றைய மூன்று எதிராளிகளின் சட்டத்தரணியான எம்.ஏ. சுமந்திரன்.

இன்று காலை இந்த வழக்கு யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி சதீஸ்கரன் முன்னிலையில் எடுக்கப்பட்டபோது அது பற்றிய பூர்வாங்க விசாரணைகள் இடம்பெற்றன.

வழக்காளி தரப்பில் சட்டத்தரணி குருபரனும், வழக்கின் முதல் மூன்று எதிராளிகளான கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், கட்சியின் பதில் பொதுச்செயலாளராக இருந்த வைத்தியர் ப.சத்தியலிங்கம், கட்சியின் நிர்வாகச் செயலாளர் எக்ஸ்.குலநாயகம் ஆகியோர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கே.சயந்தன் ஆகியோரும் முன்னிலையாகி இருந்தனர்.

நான்காவது எதிராளியான சிவஞானம் சிறீதரன் சார்பில் வழக்கின் ஆரம்பத்தில் சட்டத்தரணி பிரசன்னமாகாத நிலையில் அவருக்காக நீதிமன்றம் காத்திருக்க வேண்டி இருந்தது. பின்னர் சிறீதரனின் சட்டத்தரணியும் இணைந்து கொண்டார்.

தாமும், தமது சக சட்டத்தரணியான கேசவன் சயந்தனும் இந்த வழக்கில் எதிராளிகள் சார்பில் முன்னிலையாகாமல் தவிர்க்கச் செய்வதற்காக, இந்த வழக்கின் பிராதில் பல இடங்களில் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களான தங்கள் இருவரின் பெயரும் வலிந்து நுழைக்கப்பட்டுள்ளன என ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் ஆரம்பத்தில் சுட்டிக்காட்டிப் பதிவுகளைச் செய்தார்.

ஆயினும் வழக்காளியின் சட்டத்தரணிகளாகத் தங்களின் பிரசன்னம் இந்த வழக்கின் போக்கை பாதிக்காது என்பதை அவர்கள் மன்றில் தெளிவுபடுத்தினர்.

"இப்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல் அழைக்கப்பட்டு இருக்கின்றது. அதில் போட்டியிடக் கூடிய புதிய சூழ்நிலை வந்திருப்பதால் இந்த விடயம் குறித்து தீர்மானிக்க வேண்டிய ஒரு தேவை புதிதாக வந்திருக்கிறது." - என்று வழக்காளி தரப்புச் சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

அதை ஆட்சேபித்தார் எதிராளி தரப்புச் சட்டத்தரணி சுமந்திரன். "கட்சியில் மாவட்டக் கிளைத் தலைவராக இருந்து கொண்டு பொதுத் தேர்தலில் மாவட்டத்தில் போட்டியிடும் கட்சியின் வேட்பாளர்களைப் பகிரங்க வெளியில் வேண்டுமென்றே மோசமாக விமர்சித்து குற்றம் இழைத்த வழக்காளிக்கு இன்னொரு தேர்தலில் வாய்ப்பு அளிக்க கட்சி இடமளிக்க மாட்டாது. இப்போது வந்திருக்கின்ற தேர்தலும் கூட, கட்சியில் இடமளிக்காமல் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து மனுதாரரை இடைநிறுத்த வேண்டிய தேவையை மீண்டும் ஏற்படுத்தி இருக்கின்றது. ஆகவே, அது புதிய விடயம் அல்ல. அதைப் புதிய விடயமாகக் காட்டி, அவரைக் கட்சியிலிருந்து இடைநிறுத்தியமைக்கு எதிராக இடைக்காலத் தடை விதிப்பதற்குப் புதிய தேவைப்பாடு எழுந்திருப்பதாகக் காட்டுவது அர்த்தமற்றது. அடுத்தது, இத்தகைய நடத்தை உடையவருக்கு கட்சி எந்தக் கட்டத்திலும் வேட்பாளராக இடமளிக்கவே மாட்டாது. அப்படி அவருக்கு வேட்பாளராக இடமளிக்கும்படி எந்த நீதிமன்றமும் கூட ஒரு கட்சியைக் கட்டாயப்படுத்த முடியாது. ஆகவே, தேர்தல் வந்திருக்கின்றது, அது புதிய விடயம் என்று காரணத்தைக் காட்டி, அந்தப் புதுச் சூழலின் அடிப்படையில் தடையை நீக்குவதற்கான ஒரு கோரிக்கையை வழக்காளி வைப்பதற்கு அர்த்தமே இல்லை." - என்று எதிராளி தரப்புச் சட்டத்தரணி சுமந்திரன் வாதிட்டார்.

ஏற்கனவே இத்தகைய மனு ஒன்றை இதே நீதிமன்றத்தில் வழக்காளி தாக்கல் செய்தார். அதனை நீதிமன்றம் நிராகரித்துள்ளது. வழக்காளியைக் கட்சியிலிருந்து இடைநிறுத்தும் முடிவுக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு ஒன்று வழங்குவதற்கு இந்த வழக்கில் முகத் தோற்றத்தளவிலேயே காரணங்கள் ஏதும் இல்லை என்று இந்த நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவு வழங்கியிருக்கின்றமையை சுமந்திரன் மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த வைத்தியர் ப.சத்தியலிங்கமும் தாமும் (சுமந்திரனும்) சேர்ந்து கபட நடவடிக்கைகளை முன்னெடுத்து, கட்சியின் மாநாடுநடைபெறாமல்-பொதுக்குழுவைக் கூட்ட முடியாமல் - தடை உத்தரவை திருகோணமலை நீதிமன்றம் மூலம் கபடமாகப் பெற்று, விடயங்களை முன்னெடுக்கின்றனர் என்று வழக்காளி தமது மனுவில் தெரிவித்திருக்கின்றமையை முதல் மூன்று எதிராளிகளின் சட்டத்தரணி சுமந்திரன் இன்று நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

வழக்காளியின் பிராதில் கூறப்பட்டுள்ள அந்தக்கருத்தை-விடயங்களைஅப்படியே தான் ஏற்கின்றார் என நான்காவது எதிராளியான சிறீதரன் தன்னுடைய பதில் மனுவில் தெரிவித்துள்ளார்.

ஆனால், திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் கட்சியின் பொதுக்குழு கூடுவதற்கு எதிராக வழங்கிய இடைக்காலக் கட்டளை அந்த வழக்கின் எதிராளிகளில் ஒருவரான சிறீதரனின் இணக்கத்துடன்தான் வழங்கப்படுகின்றது என்பது அந்தக் கட்டளையிலேயே தெளிவாகத் தெரிவிக்கப்பட்டு இருக்கின்றது. அப்படி அந்த நீதிமன்றத்துடன் இணங்கி, அந்த இடைக்காலக் கட்டளைக்குச் சம்மதம் தெரிவிக்கின்றார் என ஒப்புக்கொண்ட சிறீதரன், இப்போது இந்த வழக்கில் வந்து, அந்தக் கட்டளையை ஏற்படுத்தியதன் மூலம் சுமந்திரன், சத்தியலிங்கம் ஆகியோர் கபடமாக நடந்து கொள்கின்றனர் என்று கூறுவது முற்றிலும் தவறானதும், முரணானதும், உண்மைக்கு மாறானதும் ஆகும் என்று எதிராளி தரப்பு சட்டத்தரணி சுமந்திரன் சுட்டிக்காட்டியமையை யாழ். நீதிமன்றம் இன்று பதிவு செய்து கொண்டுள்ளது.

இடைக்காலக் கட்டளை தொடர்பான உத்தரவு நாளைமறுதினம் வியாழக்கிழமை யாழ். நீதிமன்றத்தில் வழங்கப்பட இருக்கின்றது.

# அர்ச்சுனா அணியினர் இன்றும் கட்டுப்பணம்

(எஸ்.நிதர்ஷன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா இன்றைய தினமும் யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.




நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அர்ச்சுனா எம்.பி. தலைமையில் வடக்கு, கிழக்கில் சுயேச்சை அணி களமிறக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ். மாவட்டத்தில் யாழ். மாநகர சபை உள்ளிட்ட ஐந்து சபைகளுக்கு நேற்றைய தினம் கட்டுப்பணம் செலுத்தி இருந்த நிலையில் இன்றைய தினம் ஏனைய சபைகளுக்குக் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளார்.

இதேபோன்று வடக்கு, கிழக்கில் உள்ள ஏனைய உள்ளூராட்சி சபைகளிலும் அர்ச்சுனா எம்.பி. தலைமையிலான சுயேச்சைக் குழு போட்டியிடவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## குழப்பத்தில் அதானி குழுமத் திட்டம்

மன்னார் மற்றும் பூநகரியில் 484 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி காற்றாலை பண்ணையை அமைப்பது தொடர்பான தனது திட்டம் தொடர்பில் இந்தியாவின் அதானி குழுமம் இன்னும் இரண்டுங்கெட்டான் நிலைப்பாட்டில் இருப்பதாக விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

உத்தேச மின் உற்பத்தி திட்டங்களுக்கு இலங்கை அரசுடன் அதானி குழுமம் ஏற்கனவே இணக்கம் கண்ட பின்புலத்தில் பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாயினவாயினும், புதிதாகப் பதவியேற்ற இலங்கை அரசாங்கம் அந்த மின் திட்டம் மூலம் கொள்வனவு செய்ய இணக்கம் காணப்பட்ட மின்சாரத்துக்கான கட்டணம் தொடர்பில் தீர்க்கமான புதிய நிலைப்பாடு சிலவற்றை எடுத்தமையால் காணப்பட்ட இணக்கம் குழப்பத்துக்கு உள்ளானது.

இருபது ஆண்டுகள் மின் கொள்முதல் ஒப்பந்தத்தின் கீழ் ஒரு யூனிட் மின்சாரத்தை 8.26 டொலர் சதத்திற்கு வாங்குவதற்கு முன்னைய இலங்கை அரசு ஒப்புக் கொண்டிருந்தது. அதனை ஒரு கிலோ வாட் மணிக்கு ஐந்து முதல் ஆறு டொலர் சதத்திற்கே வாங்க முடியும் என்று தற்போதைய இலங்கை அரசு ஒற்றைக் காலில் நிற்கிறது. அதைக் குறைந்தது ஏழு டொலர் சதம் அளவிற்காவது உயர்த்துவதற்கு இலங்கை அரசு இணங்குமானால், அதை ஒப்புக்கொண்டு திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க அதானி குழுமம் தயாராக இருப்பதாகக் கூறப்படுகிறது.

சுமார் 100 கோடி டொலர் மதிப்புள்ள இந்தத் திட்டத்திற்காக ஏற்கனவே பூர்வாங்க வேலைகளை ஒட்டி 50 லட்சம் டொலர்களை அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் செலவிட்டுள்ளது.

இப்போது இந்தத் திட்டத்தில் இருந்து வெளியேறுவதாக அறிவித்த அதானி குழுமம், தொடர்ந்தும் இது தொடர்பில் இலங்கையின் புதிய அரசுடன் பேச்சு நடத்த சமிக்ஞை காட்டி வருவதாகக் கூறப்படுகிறது.


மன்னாரில் சுற்றுச்சூழல் ஒப்புதலைத் தவிர்த்து இந்தத் திட்டம் தொடர்பான பெரும்பாலான ஒழுங்குமுறை அனுமதிகளை அதானி குழுமம் பெற்றுக் கொண்டு விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் இந்தக் காற்றாலைத் திட்டத்தை நிறுத்துமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஐந்து அடிப்படை உரிமை மீறல் மனுக்கள், அந்த திட்டத்தில் இருந்து அதானி குழுமம் வெளியேறுவதாக அரசாங்கத்துக்கு எழுத்து மூலம் அறிவித்திருக்கின்றது என சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் தெரிவித்தமையை அடுத்து இன்று விலக்கிக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஆயினும் இந்தத் திட்டத்திற்கான முயற்சி இன்னமும் அடியோடு கைவிடப்படவில்லை, திட்டத்தைத் தொடர்வதற்கான வாய்ப்புகள் இன்னும் பிரகாசமாகவே இருக்கின்றன என்று கொழும்பு வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

திட்டத்திலிருந்து விலகுவதற்கான முடிவு குறித்து இலங்கை முதலீட்டுச் சபைக்கு அதானி நிறுவனம் கடிதம் எழுதியிருந்தாலும், அதை முற்றிலுமாக நிறுத்த எந்தச் சட்ட நடவடிக்கைகளையும் அது இன்னும் எடுக்கவில்லை என்றும் வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

குழப்பத்தில் இருக்கும் அதானி குழுமத் திட்டம் குறித்து ஜூன் மாதத்துக்கு முதல் ஒரு திட்டவட்டமான முடிவு எடுக்கப்படும் எனக் கூறப்படுகின்றது. அதுவரையில் விவகாரம் நடக்கும், நடக்காது என்ற இருகட்ட தளத்தில் இழுபடும் என்றே தோன்றுகின்றது.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA





# காரைதீவு நடனநர்த்தகி தக்ஷாலினிக்கு ‘ஆடல் வல்லான் கலை வளர்மணி’ விருது

(வி.ரி.சகாதேவராஜா)

இந்தியா, திருவண்ணாமலையில் நடைபெற்ற 22 ஆவது அனைத்துலக திருமந்திரத் தமிழ் ஆய்வு மாநாடு - 2025 நிகழ்வில் காரைதீவைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக மாணவி செல்வி ஜெயகோபன் தக்ஷாலினி “ ஆடல் வல லான் கலை வளர்மணி” விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

அவர் இந்த வாரம் அவரது குழுவினருடன் தமிழ்நாடு சென்றிருந்தார். அங்கு திருவண்ணாமலையில் குழு நடனம் இடம்பெற்றது.

திருவையாறு ஔவை அறக்கட்டளை மூலம் திருமூலர் ஆச்சிரமத்தில் நடத்தப்பட்ட 22 ஆவது அனைத்துலக திருமந்திரத்தமிழ் ஆய்வு மாநாடு - 2025 நிகழ்வில் கலந்து கொண்டார்.

மேலும் சிதம்பரம் ஆலய சந்நிதானத்தில் நடனம் இடம் பெற்றது. அங்கும் பொன்னாடை போர்த்தி வாழ்த்து சான்றிதழும் வழங்கப்பட்டது.




# உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்துவத்தை நிரூபிப்போம்

## அனுஷா சந்திரசேகரன் தெரிவிப்பு

(பொகவந்தலாவ சதீஷ்)

இந்த முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எங்களுடைய தனித்துவத்தை நிரூபிப்பதற்காகவும் புதிய இளைஞர்களுக்கான வாய்ப்பை வழங்குவதற்காகவும் புதிய வேட்பாளர்களுக்கான வாய்ப்புகளை வழங்குவதற்காகவும் நாம் தனித்துவமாக தபால் பெட்டி சின்னத்தில் இந்தமுறை நுவரெலியா மாவட்டத்தில் களமிறங்க தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு அண்ணா சந்திரசேகரன் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் அனுஷா சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.



நுவரெலியா தேர்தல் திணைக் களத்தில் சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரன் தலைமையில் சந்திரசேகரன் மக்கள் முன்னணி, அண்ணா சந்திரசேகரன் தொழிலாளர் முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி, நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள பல சபைகளுக்கும் ஜனநாயக தேசிய கூட்டணியின் தபால்பெட்டி சின்னத்தில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்திய பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைகளாக நகர சபைகளிலும் பிரதேச சபைகளிலும் எங்களுடைய வேட்பாளர்கள் அதுவும் பலம் வாய்ந்த வேட்பாளர்கள், புதிய வேட்பாளர்கள் களமிறங்க தயாராக இருக்கிறார்கள்.

இதன் மூலமாக உள்ளூராட்சி சபைகளில் எங்களுடைய பிரதிநிதித்துவத்தைப் பெற்று அதன் மூலமாக மலையக மக்களுக்கு எங்களால் முடிந்த சேவைகளைச் செய்யத் தயாராக இருக்கிறோம்.- என்றார்.



# புத்தளம் மாநகர சபைக்கு கட்டுப்பணம் செலுத்தியது ஐக்கிய தேசிய முன்னணி

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் புத்தளம் மாநகர சபைக்கு ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் தராசு சின்னத்தில் ஜவுபர் மரைக்கார் தலைமையில் கட்டுப்பணம் உதவி தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்தில் செலுத்தப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக புத்தளம் மாநகர சபைக்கான கட்டுப்பணம் மாத்திரமே ஐக்கிய தேசிய முன்னணியால் செலுத்தப்பட்டுள்ளது. புத்தளம் பிரதேச சபைக்கான கட்டுப்பணம் விரைவில் செலுத்தப்படும் எனவும் ஜவுபர் மரைக்கார் தெரிவித்துள்ளார்.

இதன்போது ஜவுபர் மரைக்கார், நஸ்ஹத் மரைக்கார் மற்றும் ஆசிரியர் பாரூக் பதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# பெண்ணாகப் பிறந்தாலும் மண்சிறக்க வாழ்ந்தார்!

## ( இன்று காரைக்கால் அம்மையாரின் குருபூசை )

பன்மொழிகள் பாரெங்கும் பரவியே இருக்கு
பசுந்தமிழோ தனித்துவமாய் எழுந்துமே இருக்கு
பக்தியை இலக்கியமாய் கண்டதும் தமிழே
பாருக்குப் பண்ணிசையைக் கொடுத்ததும் தமிழே

கடவுளையே மொழியாக்கிக் கண்டதும் தமிழே
கடவுளே தமிழ்கேட்க விரும்பியதும் உயர்வே
அடியார்கள் தமிழ்கேட்டு ஆண்டவனே மகிழ்ந்தான்
அகிலத்தில் தமிழ் மொழியே அமுதமாயிருக்கு

எம்மொழியும் பக்தியினைத் தொட்டதும் இல்லை
பக்தியெனும் பெரு வெளியில் பயணிக்கவில்லை
எம்மொழியாம் தமிழொன்றே பக்தியைப் பற்றியதே
இதனாலே தமிழுமே தனித்துவமாய் மிளிர்கிறது

பக்தியை இலக்கியமாய் பாருமே பார்ப்பதற்கு
படைத்திட்ட எங்கள்மொழி பாருக்குள் உயர்வாகும்
பக்திக்குள் மூழ்கிவிட்டால் பரவசமே உருவாகும்
பரவசத்தை அளிப்பது பாங்குடைய தமிழாகும்

பக்தி இலக்கியத்தை தொடக்கிய முன்னோடி
காரைக்கால் ஈன்றெடுத்த கனிவான பெண்ணாவார்
மாதரில் மாணிக்கமாய் மாசில்லா மங்கையாய்
மாதவத்தின் உருவமாய் வந்துமே பிறந்திட்டார்

நல்லறமாம் இல்லறத்தில் நங்கையும் இணைந்திட்டாள்
நற்கணவன் கைபிடித்து நலமுடனே வாழ்ந்திட்டாள்
தெய்வமது சித்தத்தால் சீரான குடும்பமதில்
தித்திக்கும் மாங்கனி திசைமாறச் செய்ததுவே

கைபிடித்த கணவன் கண்ணான மனைவியை
சந்தேக மனத்துடனே சஞ்சலத்துள் ஆழ்த்தினான்
மாங்கனியின் மாயத்தை மனமேற்க மறுத்ததால்
மாதரசி மங்கையை மனமொதுக்கி அகன்றிட்டான்

பதிறித் துடித்தாள் பரமனையே பற்றினாள்
அழகுடைக் கோலத்தை அருவருப்பாய் எண்ணினாள்
யாருமே விரும்பாத கோலத்தை மனங்கொண்டாள்
பேயுருவை பெருவிருப்பாய் பெற்றிட்டாள்
இறைவனிடம்


காரைக்கால் அம்மை பேயுருவாய் மாறினார்
கணக்கில்லாப் பேரன்பை கடவுளிடம் காட்டினார்
பக்திப் பெருவெளியில் பயணிக்கத் தொடங்கினார்
பரமனைப் பாடினார் பக்திக்கும் வித்திட்டார்

அன்னைத் தமிழுக்கு அம்மையார் பெருஞ்சொத்தே
முன்னவராய் இருந்து இணைத்திட்டார் பக்தியை
பக்தி இலக்கியமாய் மலர்வதற்கு வித்திட்டார்
பசுந்தமிழும் அதையேற்று பார்போற்ற எழுந்ததுவே

இசையாலே தமிழ்பாடி இறைதுதிக்க வழிசெய்த
எங்கள்தமிழ் முன்னோடி காரைக்கால் அம்மையே
அவர்வகுத்த அடியொற்றி அவர்பின்னே வந்தடியார்
ஆண்டவனைப் பண்ணோடு அன்புருகப் பாடினரே

அந்தாதி தந்தார் பதிகமும் தந்தார்
திருவிரட்டை மணிமாலை சிறப்பாகத் தந்தார்
பதிகத்தைத் தொடக்கி பக்தியைக் காட்டி
அந்தாதிக் கருத்திருத்தி ஆண்டவனைப் பாடினார்

பக்திப் பாமரபில் முன்னோடி அம்மையார்
பதிகத்தைத் தொடக்கியவரும் காரைக்கால்
அம்மையார்
வெண்பாவைத் தொட்டார் விருத்தத்தைக் காட்டினார்
பண்பாடிப் பக்தியிலே பலர்தொடர வழிவகுத்தார்



இசைத் தமிழால் பாடுதற்கு வித்தானாரிவரே
பண்பாடி பக்தியினைப் பரப்புதற்கும் முன்னோடி
நாயன்மார் பண்ணோடு நற்றமில் பாட
காரைக் காலம்மையே தனிப்பாதை வகுத்தார்

சைவத்தை மேலாகத் தன்னகத்தில் கொண்டார்
தமிழ்ப் பக்தியியக்கத்தின் முன்னோடி ஆனார்
பேயுருவை உவந்தேற்ற பெரும்பெண்ணும் ஆனார்
பெம்மானே அம்மையென அழைத்த பெண்ணுமாவர்
இறையுணர்வை இலக்கியத்தில் இணைத்த
பெண்ணாவார்
இறையடியில் இருப்பதை இன்பமாய் ஏற்றார்
பேயுருவில் கைலாயம் சென்ற பெண்ணாவர்
பெம்மானின் கோவிலில் இருப்பிடமும் பெற்றார்

காரைக்கால் அம்மையை கருத்தினிலே வைப்போம்
காலத்தால் அழியாத கவிமரபை அளித்திட்டார்
திருமுறைகள் வருவதற்குத் திறவுகோல் அவராவர்
அவர் நினைவை அனவருமே அகமிருத்துவோமே

பெண்ணாகப் பிறந்தாலும் மண்சிறக்க வாழ்ந்தார்
பெருமானின் திருவடியை பெரும்பேறாய் கொண்டார்
பக்திப் பெருவெளியில் முத்தாக ஒளிர்ந்தார்
பாடினார் பாடினார் பரமனுமே மகிழ்ந்திட்டார்



**மகாதேவஐயர் ஜெயராமசர்மா,**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.






# கல்முனையில் சர்வதேச மகளிர் தின விழா

(வி.ரி.சகாதேவராஜா)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்திய சாலையில் சர்வதேச மகளிர் தின விழா பணிப்பாளர் வைத்திய கலாநிதி குணசிங்கம் சுகுணன் தலைமையில் நடைபெற்றது.

மகளிர் தினத்தினை முன்னிட்டு பல வகையான நிகழ்வுகள் இடம் பெற்றன.

பெண்களுக்கான பற் சுகாதாரம் பேணும் நடவடிக்கை மற்றும் மகளிர் சுகவாழ்வு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் சமகாலத்தில் நடைபெற்றன.

வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டனர்.









# கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பூசை பொருள்கள் அன்பளிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மடு தம்பனைக்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மடு பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பில் சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி பூசை உபகரணங்கள் ஆலய நிர்வாகத்தினரிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

இது தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பூசை உபகரணங்களை ஆலய நிர்வாகத்தினரிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இந்த நிகழ்வில் மடு பிரதேச செயலாளர் கீ.பீட் நிஜாகரன், கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வவுனியா குருமன்காடு காளியம்மன் கோவில் மற்றும் வவுனியா கந்தசுவாமி ஆலயம் ஆகியன மேற்படி பூசை உபகரணங்களை அன்பளிப்பு செய்திருந்தன.

கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் இந்த நிகழ்ச்சி திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராக பணியாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.







# வடக்கு மென்பந்துச் சுற்றுப் போட்டியில் மன்னார் மாவட்ட செயலக அணி வெற்றி

(வாஸ் கூஞ்ஞ)

வடமாகாண பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான மென்பந்து சுற்றுப் போட்டியில் மன்னார் மாவட்ட செயலக அணி மூன்றாவது முறையாக வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கி கொண்டது.

2025 ஆம் ஆண்டின் வடமாகாணத்தின் மாவட்ட செயலகத்துக்கு உட்பட்ட பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான மென்பந்து சுற்றுப்போட்டி மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் நகரசபை மைதானத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர் அணியினர் இந்த மென்பந்துச் சுற்றுப் போட்டியில் மோதினர்.

இந்த சுற்றுப் போட்டியின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் மன்னார் – யாழ்ப்பாண அணிகள் மோதியதுடன் இறுதிப் போட்டிக்கு மன்னார் அணி தகுதிபெற்றது.

மற்றைய பிரிவில் முல்லைத்தீவு வவுனியா அணிகள் அரையிறுதிப் போட்டியில் மோதியன. இதில் முல்லைத்தீவு மாவட்ட அணி எந்தவித விக்கெட் இழப்பின்றி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

இறுதிப் போட்டியில் மன்னார் – முல்லைத்தீவு அணிகள் மோதின. நாணய ச் சுழற்சியில் வெற்றிபெற்ற முல்லைத்தீவு மாவட்ட செயலக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி நிர்ணயிக்கப்பட்ட எட்டுப் பந்து பரிமாற்றத்தில் மூன்று இலக்குக்களை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

79 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களம்புகுந்த மன்னார் மாவட்ட அணி எட்டாவது பந்துப் பரிமாற்றத்தில் நான்கு இலக்குகளை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்று கிண்ணத்தை வென்றது. முல்லைத்தீவு மாவட்ட அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

முல்லைத்தீவு மாவட்ட அணியில் மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன் விளையாடியிருந்தார். அதே போன்று மன்னார் அணியில் அரச அதிபர் .க.கனகேஸ்வரன், கிளிநொச்சி அணியில் அரச அதிபர் முரளிதரன் ஆகியோரும் விளையாடியிருந்தனர்.

இறுதிப் போட்டியில் எந்த அணி கிண்ணத்தை கைப்பற்றும் என்பது தீர்மானிக்க முடியாத அளவுக்கு இறுதிப் பந்து பரிமாற்றம்வரை போட்டி விறுவிறுப்பாக அமைந்தது.




## புல்மோட்டை – திருகோணமலை வீதி விபத்தில் ஒருவர் காயம்!

(எஸ்.கீதபொன்கலன்)

புல்மோட்டை – திருகோணமலை பிரதான வீதியில், நிலாவெளி பிரதேச வைத்தியசாலைக்கு முன்பாக இன்று (18) காலை வாகன விபத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இதில் ஓட்டோ சாரதி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் நிலாவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## ஐக்கிய சமாதான கூட்டமைப்பு காரைதீவில் தனித்துப் போட்டி




(பாறுக் ஷிஹான்)

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அம்பாறை மாவட்ட செயலகத்தில் உள்ள தேர்தல் அலுவலத்தில் இன்றைய தினம் (18) அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தி வருகின்றன.

இதற்கமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு சார்பாகக் காரைதீவு பிரதேச சபை வேட்பு மனுக்களுக்கான கட்டுப்பணம் இன்று (18) அம்பாறை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் செலுத்தப்பட்டது.

இதன்போது ஐக்கிய சமாதான கூட்டமைப்புக் கட்சியின் உப தலைவர் கலாநிதி ஹக்கீம் செரீப் உட்பட ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் இணைப்புச் செயலாளர் ஏ.எம். அகுவர் ஆகியோர் இணைந்து கட்டுப்பணத்தைச் செலுத்தினர்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மற்றும் புத்தளம் மாவட்டங்களிலும் தமது ஐக்கிய சமாதான கூட்டமைப்பு போட்டியிட தீர்மானித்துள்ளது என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சியின் உப தலைவர் சரீப் ஹக்கீம் தெரிவித்தார்.



# கடலில் தரித்திருந்த படகு மூழ்கியுள்ளது!

## கல்முனையில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)

இயந்திரம் உட்பட வலைகளுடன் கடலில் நங்கூரத்தில் இணைக்கப்பட்டு தரித்திருந்த பாரிய படகு ஒன்று இன்று (18) காலை கடலில் மூழ்கியுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்திய கடல் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. படகை மீட்டு கடற்கரைப் பகுதிக்கு இழுத்துக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் பல தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படகு கடற்கரையில் நங்கூரமிட்ட நிலையில் நிறுத்தப்பட்ட போதிலும் அந்தப் பகுதியில் வீசிய பலத்த காற்றால் படகு இயந்திரம் உட்பட வலைகளுடன் கடலில் விழுந்து மூழ்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மூழ்கிய படகு சுமார் 65 லட்சம் ரூபாவரை பெறுமதியானது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனைக் கனரக வாகனங்களது உதவியுடன் மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# மன்னாரில் கட்டுப்பணம் செலுத்திய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை மற்றும் நான்கு பிரதேச சபைகளில் போட்டியிட இன்று செவ்வாய்க்கிழமை (18) மன்னார் தேர்தல் திணைக்களத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது.

வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் தலைமையில் மன்னார் நகர சபை மற்றும் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு பிரதேச சபைகள் உள்ளடங்களாக 5 உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மன்னார் நகர சபை தேர்தலில் 'தராசு' சின்னத்தில் ஐக்கிய தேசிய கூட்டமைப்பிலும், ஏனைய மன்னார், நானாட்டான், முசலி மற்றும் மாந்தை மேற்குப் பிரதேச சபை தேர்தல்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மரச் சின்னத்திலும் போட்டியிடவுள்ளது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹுனைஸ் பாரூக் தெரிவித்தார்.

# கந்தளாய் சீனித்தொழிற்சாலை அபிவிருத்திக்கு பன்மடங்கு நிதி ஒதுக்கீடு செய்தல் வேண்டும்

## இன்று நாடாளுமன்றில் சண்முகம் குகதாசன் எம்.பி. கோரிக்கை

(ஹஸ்பர் ஏ.எச்.)

கந்தளாய் சீனித் தொழிற்சாலையை அபிவிருத்தி செய்யப் பன்மடங்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் பாதீட்டு விவாதத்தில் இன்று (18) உரையாற்றிய பொது இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்துள்ளதாவது,

இன்று உலகில் உள்ள பொருளாதாரத்தை விவசாயத்துறை, கைத்தொழிற்துறை, சேவைத்துறை எனப் பிரித்துப் பார்க்கலாம். பொருளியல் அறிஞரான டேவிட் ரிக்காடோ தனது ஒப்பீட்டு நன்மைக் கோட்பாட்டின்படி உலகில் உள்ள நாடுகள் குறைந்த உற்பத்திச் செலவுடன் சிறப்பாக உற்பத்தி செய்யக் கூடிய துறைகளில் தத்தமது வளங்களை ஒதுக்கீடு செய்வதன் மூலம் குறித்த உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி அடைவதோடு, அதனை கட்டற்ற சந்தையில் பிற நாடுகளுடன் பரிமாற்றம் செய்வதன் மூலம் இரு பகுதியினரும் நன்மை அடைய முடியும் எனக் கூறினார்.

இந்த அடிப்படையில் சில நாடுகள் விவசாய உற்பத்திகளை மேற்கொள்ளும் நாடுகளாகவும் இன்னும் சில நாடுகள் கைத்தொழில் உற்பத்திகளை மேற்கொள்ளும் நாடுகளாகவும் மாறிவிட்டன. விவசாய உற்பத்திகளுக்கான விலைசார் கேள்வி நெகிழ்ச்சி குறைவாகவும் கைத்தொழில் உற்பத்திகளுக்கான விலைசார் கேள்வி நெகிழ்ச்சி அதிகமாகவும் உள்ளது.

இதனால் ஒப்பீட்டு நன்மைக் கோட்பாட்டின் அடிப்படையில் கைத்தொழில் உற்பத்திகளை மேற்கொண்ட நாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளாக மாறிவிட்டன.

விவசாய உற்பத்திகளை முதன்மையாக கொண்ட நாடுகள் குறை அபிவிருத்தி கொண்ட நாடுகளாக மாறிவிட்டன. எனவே நாமும் கைத்தொழில் துறையை முதன்மையாகக் கொண்ட நாடாக மாறவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

இந்தச் சூழலில், இந்த அரசால் முன்வைக்கப்பட்டுள்ள பாதீட்டில் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சுக்கு மீண்டெழும் செலவுக்காக 4.8 பில்லியன் ரூபாவும் மூலதன செலவுக்காக 8.6 பில்லியன் ரூபாவும் மொத்தமாக 13.4 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 3.9 பில்லியன் ரூபா அதிகமாகும். இது வரவேற்கத்தக்கது. எனினும் இந்த



ஒதுக்கம் கைத்தொழில் துறையை மேம்படுத்த வேண்டும் என நினைக்கும் நாட்டுக்குப் போதுமானதல்ல.

எடுத்துக்காட்டாக, திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கந்தளாய் சீனி ஆலையானது மோசமாக பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனை மறுசீரமைக்க 26 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டை பத்து மடங்காக அதிகரித்தால் கூட அதனை மீள செயல்படுத்த முடியாத நிலை உள்ளது. எனவே இதற்கான ஒதுக்கீடு பன்மடங்காக அதிகரிக்கப்பட வேண்டும்.

நமது நாட்டில் கைத்தொழில் துறையின் பங்கை அதிகரிக்க வேண்டுமானால், இதில் உள்ள சவால்களையும் வாய்ப்புகளையும் பற்றி விவாதிப்பது அவசியம். மேலும், உலகின் பிற நாடுகளின் வெற்றிகரமான நடைமுறைகளில் இருந்து பாடங்களைக் கற்று, இலங்கைக்கான நடைமுறைத் தீர்வுகளை முன்வைக்க வேண்டும்.

கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்திக்காக தென் கொரியா மற்றும் ஜேர்மனி முதலிய நாடுகள் தங்கள் பாதீட்டில் 5-7 வீதமான தொகையை ஒதுக்குகின்றன. இந்த நாடுகள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, தொழில்நுட்ப ஏற்பு, சிறிய மற்றும் நடுத்தர தொழில்களுக்கு ஆதரவை முன்னுரிமையாகக் கொண்டுள்ளன. இதன் மூலம் அவை உலகளவில் போட்டித்திறன்மிக்க நாடுகளாக உயர்ந்துள்ளன.

இதற்கு மாறாக, இலங்கையில் இந்தத் துறைக்கான ஒதுக்கீடு பாதீட்டில் 0.3 வீதமாக உள்ளது. இந்தக் குறைந்த ஒதுக்கீடானது, உலகளவில் போட்டியிடும் நமது திறனைக் குறைத்து, உள்நாட்டுத் தொழில்களின் வளர்ச்சியைத் தடுக்கிறது.

மேலும், இந்தியா மற்றும் வியட்நாம் முதலிய நாடுகள் எண்ம மயமாக்கல், பசுமை ஆற்றல் மற்றும் ஏற்றுமதி சார்ந்த உற்பத்தித் துறையில் புரட்சிகளைத் தொடங்கியுள்ளன. இந்தப் புரட்சிகள் அவர்களது பொருளாதாரத்தை மாற்றியமைத்து, பெருமளவான வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளதோடு வெளிநாட்டு முதலீடுகளையும் ஈர்த்துள்ளன.

இலங்கையில், கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் துறை பல சவால்களை எதிர்கொள்கிறது.

1. நிதி அணுகல் இன்மை – தொழில் முனைவோர், குறிப்பாக கிராமப் புறங்களில், தொழில் தொடங்க அல்லது விரிவாக்க கடன் அல்லது நிதியுதவி பெறுவதில் சிரமப்படுகின்றனர்.

2. பழைய தொழில்நுட்பம் – நமது தொழில்கள் பழைய இயந்திரங்கள் மற்றும் செயல்முறைகளை நம்பியுள்ளன. இது உற்பத்தித் திறனைக் குறைக்கிறது.

3. ஏற்றுமதி மாறுபாடு இன்மை – தேயிலை மற்றும் ஆடை போன்ற பாரம்பரிய ஏற்றுமதிகளை மட்டுமே நம்பியிருப்பது, உலகச் சந்தை ஏற்ற இறக்கங்களுக்கு நம்மை பாதிப்படைய வைக்கிறது.

4. வினைத்திறன் மிக்க தொழிலாளர் பற்றாக்குறை – கல்வி நிறுவனங்களில் கற்பிக்கப்படும் திறன்களுக்கும் நவீன தொழில்களின் தேவைகளுக்கும் இடையே பெரியதோர் இடைவெளி உள்ளது.

இந்தச் சவால்களை சமாளிக்க, பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் .

கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்திக்காக பாதீட்டில் குறைந்தது ஐந்து வீதமான நிதி ஒதுக்கப்பட வேண்டும். இந்த நிதியானது ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு,

தொடர்ச்சி▼

# கந்தளாய் சீனித்தொழிற்சாலை அபிவிருத்திக்கு பன்மடங்கு நிதி ஒதுக்கீடு செய்தல் வேண்டும்

தொடர்ச்சி▲

தொழில்நுட்ப மேம்பாடு, சிறிய மற்றும் நடுத்தர தொழில்களின் (ளுஆநு) ஆதரவுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக,

1. எண்ம மயமாக்கல் – இந்தியாவின் "டிஜிட்டல் இந்தியா" திட்டத்தைப் போல தொழில்களை நவீனமயமாக்கி, திறனை மேம்படுத்த வேண்டும்.

2. பசுமை ஆற்றல் – புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழில்நுட்பங்களில் முதலீடு செய்வதன் மூலம் உற்பத்திச் செலவைக் குறைத்து, உலகளாவிய நிலைத்தன்மைப் போக்குகளுடன் இணைய வேண்டும்.

3. ஏற்றுமதி மாறுபாடு – தகவல் தொழில்நுட்ப சேவைகள், மருந்து உற்பத்தி மற்றும் வேளாண்மை சார்ந்த உற்பத்தி முதலிய உயர் மதிப்புள்ள தொழில்களை ஊக்குவிக்க வேண்டும்.

4. நிதி அணுகலை மேம்படுத்தல் – தொடக்க நிறுவனங்கள், சிறிய மற்றும் நடுத்தர தொழில்களுக்கு ஒரு தனி நிதியை உருவாக்க வேண்டும், குறைந்த வட்டி கடன்கள் மற்றும் நிதியுதவிகளை வழங்க வேண்டும், பன்னாட்டு நிதி நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்து தொழில்நுட்ப உதவி மற்றும் நிதியுதவி வழங்க வேண்டும்.

5. திறன் மேம்பாடு– பல்கலைக் கழகங்கள் மற்றும் தொழிற்கல்வி நடுவங்களோடு இணைந்து தொழில் சார்ந்த பாடத்திட்டங்களை வடிவமைக்க வேண்டும், கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்கு இடையேயான இடைவெளியைக் குறைப்பதற்கான பயிற்சித் திட்டங்களைத் தொடங்க வேண்டும்.

6. பொது –தனியார் கூட்டு முயற்சிகள் – அரசு மற்றும் தனியார் துறையிடையே கூட்டு முயற்சிகளை ஊக்குவிக்க வேண்டும். இது முதன்மையான தொழில்களில் புதுமையை ஊக்குவிக்கும்.

அடுத்து அரச தொழில் முயற்சிகளை எடுத்துக் கொள்வோமேயானால், இவை நாட்டின் சமூக, பொருளாதார முன்னேற்றத்தில் முதன்மையான பங்கு வகிக்கின்றன. எடுத்துக்காட்டாக, வேலை வாய்ப்புகளை உருவாக்கல், வறுமை ஒழிப்பு மற்றும் நிதி உறுதித்தன்மை ஆகியவற்றில் வளரும் நாடுகளில், அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுச் சேவைகளை வழங்குவதில் முதன்மையான பங்காற்றுகின்றன.

இலங்கையில் அரசு நிறுவனங்கள், இரண்டாம் உலகப் போர் காலத்தில் இன்றியமையாத பொருள்களை வழங்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டன. நம் நாட்டில் அரசுக்கு சொந்தமான 527 பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளன. முறையற்ற அரசியல் நியமனங்கள், அதன் விளைவான வினைத்திறன் அற்ற மேலாண்மை, அளவுக்கு அதிகமான ஊழியர் நியமனங்கள், தேவையற்ற செலவுகள், ஊழல், நடைமுறைக்கு ஏற்ற மறுசீரமைப்பு இன்மை முதலிய காரணங்களால் இவ் பொதுத்துறை முயற்சிகள் நட்டத்தில் இயங்குகின்றன.

அரசு மற்றும் தனியார் பங்குடமை முயற்சிகள் உருவாக்குதல், சரியான அளவில் மறுசீரமைப்புச் செய்தல், கூட்டுறவு மேலாண்மையை ஊக்குவித்தல், எண்ம மயமாக்கல், தேவையற்ற செலவுகளைக் குறைத்தல், தொடர்ச்சியான கணக்காய்வு மற்றும் கண்காணிப்புகள் முதலியவற்றின் மூலம் இச்சிக்கலுக்கு தீர்வு காணலாம்.

தெற்காசியாவில், புத்தாக்கம் மற்றும் தொழில் முயற்சிக்கான அமைவிட நிலையமாக மாறுவதற்கு இலங்கைக்கு சிறப்பான ஆற்றல் உள்ளது. பிற நாடுகளின் வெற்றிகளில் இருந்து கற்றுக் கொண்டு, நமது குறைபாடுகளை சரி செய்வதன் மூலம், வேலைவாய்ப்பை உருவாக்கும், ஏற்றுமதியை அதிகரிக்கும் மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஒரு துடிப்பான தொழிற்துறையை உருவாக்க முடியும்.

கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல. இது நமது மக்களுக்கு, குறிப்பாக நமது இளைஞர்களுக்கு, பெரிய கனவுகளைக் காணவும், அவர்களின் வேட்கைகளை அடையவும் வாய்ப்பு அளிப்பதாகும்.

இறுதியாக, இந்த முன்மொழிவுகளை செயல்படுத்துவதில் துணிச்சலான நடவடிக்கைகளை எடுக்குமாறு கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு அமைச்சரைக் கேட்டுக் கொள்வதோடு, செழிப்பானதும் , புதுமையானதும் உலகளாவிய போட்டித்தன்மை கொண்டதுமான இலங்கையை கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.– என்றார்.





# பொத்துவில் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற விசேட இப்தார் நிகழ்வு!

(அபு அலா )

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸதீனால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த இப்தார் நிகழ்வு நேற்று (17) பொத்துவில் கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொத்துவில் பிரதேசத்தைச் சேர்ந்த உலமாக்கள், கல்விமான்கள், விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள், இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்ட பல நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பொத்துவில் சபீல் ரஷாத் அரபிக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷேஹ் கையூம் மௌலவியால் இப்தார் விஷேட பயானை நிகழ்த்தப்பட்டது.



# மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருவிழா!

(பொகவந்தலாவ)

சாமிமலை ஓல்டன் நிலாவத்தை தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகக் குடமுழுக்குப் பெரு சாந்திப் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவன் ஆலயத்துக்குப் பக்தர்களால் தீர்த்தம் எடுத்து செல்லப்பட்டு சிவனுக்கு அபிஷேகம் இடம்பெற்றது.

மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டுள்ள கருமாரியம்மனுக்கு விஷேட அலங்கார அபிசேகம் இடம்பெற்றது. இந்த கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் பிரதான குருக்கள் சத்யோயாத சிவச்சாரியார் தலைமையில் இடம்பெற்றன. பெருந்திரளான பக்த அடியார்களும் கலந்து கொண்டனர்.







# மது ஊழலுக்கு எதிராக போராட்டம்; அண்ணாமலை, தமிழிசை கைது!

தமிழ்நாடு மாநில பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் அண்ணாமலை, முன்னாள் தெலுங்கானா ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் மற்றும் மாநில செயலாளர் வினோஜ் பி செல்வம் உள்ளிட்ட தமிழக பாஜக தலைவர்கள் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு மாநில மார்க்கெட்டிங் கார்ப்பரேஷன் லிமிடெட் (டாஸ்மாக்) மதுபான ஊழலுக்கு எதிராக நேற்று திட்டமிட்ட போராட்டத்திற்கு முன்னதாக அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று திட்டமிடப்பட்டிருந்த ஆர்ப்பாட்டம், போராட்ட இடத்தை அடைவதற்கு முன்பே தலைவர்கள் வீட்டுக் காவலில் கைது செய்யப்பட்டனர் அல்லது தடுத்து வைக்கப்பட்டனர்.

தனது தடுப்புக்காவல் குறித்து பேசிய தமிழிசை சௌந்தரராஜன்,

“அவர்கள் எங்களை வீட்டை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கவில்லை. எனது 300 காரியகர்த்தாக்கள் ஒரு திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். நாங்கள் வெளியே செல்வதை அவர்கள் விரும்பவில்லை.

டாஸ்மாக்கில் நடந்ததாகக் கூறப்படும் 1,000 கோடி ரூபா ஊழலை நாங்கள் கண்டிக்கிறோம்.

நான் வெளியேற அனுமதிக்கப்பட வேண்டும், ஆனால் அவர்கள் என்னை அதைச் செய்ய அனுமதிக்கவில்லை.” என்றார்.இந்தக் கைதுகளைக் கண்டித்து, தி.மு.க. அரசு பயத்தில் செயல்படு வதாக அண்ணாமலை குற்றம் சாட் டினார்.

இது குறித்து அவர் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“பயத்தால் நடுங்கும் தி.மு.க. அரசு, அதன் மூத்த தலைவர்களில் ஒருவரும் முன்னாள் ஆளுநருமான தமிழிசை சௌந்தரராஜன், மாநிலச் செயலாளர் வினோஜ் பி செல்வன் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகளை போராட்டத்தில் பங்கேற்க விடாமல் வீட்டுக் காவலில் வைத்துள்ளது.

ஜனநாயக ரீதியாக நாங்கள் போராட்டத்தை அறிவித்ததாலா நீங்கள் இதுபோன்ற கோழைத்தனமான செயல்களில் ஈடுபடுகிறீர்கள்? திகதி அறிவிக்காமல், திடீரென்று ஒரு நாள் போராட்டம் நடத்தினால் உங்களால் என்ன செய்ய முடியும்?” என்று கேள்வி எழுப்பினார்.



# பா.ஜ.க. கண்ணாமூச்சி ஆட்டம்: தமிழக வெற்றிக் கழகம் விமர்சனம்

நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு முற்றுகை போராட்டம் என்ற பெயரில் பா.ஜ.க. கண்ணாமூச்சி ஆட்டம் ஆடுகிறது என த.வெ.க. பொதுச் செயலாளர் என். ஆனந்த் விமர்சித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“மதுபான நிலைய முறைகேடுகள் தொடர்பாக மத்திய அரசின் அமலாக்கத் துறையானது துரிதமாகச் செயல்பட்டு மேல்நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால், அதுபோன்று ஏதும் செய்யவில்லை. மாறாக, பா.ஜ.கவினர், தமிழக அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவது விந்தையிலும் விந்தை.

நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தைக் கையில் வைத்துள்ள ஆளும் கட்சியினர் முற்றுகைப் போராட்டத்தை நடத்தி, அதன் வாயிலாக எதை வலியுறுத்த முயல்கின்றனர்? மற்ற மாநிலங்களில் இதுபோன்ற மோசடிகள் நடைபெற்றபோது என்ன நடந்தது? தமிழகத்தில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? எதற்காக இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம்?

மத்திய மற்றும் மாநிலத்தை ஆளும் கட்சிகள் வெளியில் தங்களை எதிரிகள் போன்று காட்டிக்கொண்டு, புறவாசல் வழியாக மறைமுகக் கூட்டணி வைத்துக் கொண்டு மக்களை ஏமாற்றி வருகின்றனர். இது, பா.ஜ.கவின் போராட்டம் மற்றும் கைது நாடகத்தின் வாயிலாக வெட்ட வெளிச்சம் ஆகியுள்ளது.

மதுபான நிலைய நிறுவன முறைகேடுகள் தொடர்பாக உண்மையான விசாரணை நடைபெற வேண்டும். தவறு இழைத்தவர்களுக்கு, சட்டப்படி உரிய தண்டனை பெற்றுத் தரவேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# காசா மீது இஸ்ரேல் கடும் தாக்குதல்: 200 இற்கு மேற்பட்டோர் உயிரிழப்பு



காசா மற்றும் லெபனானில் போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ள போதிலும், இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

கடந்த இரண்டு வாரங்களாக காசா பகுதிக்குள் உணவு, மருந்து, எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருள்கள் செல்வதை இஸ்ரேல் முழுமையாக நிறுத்தி உள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் கிட்டத்தட்ட 200 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

தென் லெபனான் மற்றும் தென் சிரியா பகுதிகளில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் குழந்தைகள் உள்பட பத்து பேர் உயிரிழந்துள்ளனர்.

தாக்குதல் நடத்த ஆயத்தமான பயங்கரவாதிகளை குறி வைத்து இந்த தாக்குதலை நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள் ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

போர் நிறுத்தத்தை நீடிப்பதற்கான பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் இல்லாத காரணத்தினால் தாக்குதல் நடத்த உத்தரவிட்டதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.



# விண்வெளியில் இருந்து பூமிக்கு புறப்பட்டார் சுனிதா வில்லியம்ஸ்

இந்திய வம்சாவளி விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அமெரிக்க விண்வெளி வீரர் பேரி வில்மோர் பூமிக்கு புறப்பட்டுள்ளனர்.

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் மூலம் அவர்கள் பூமி கோளுக்கு வருகின்றனர். சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து டிராகன் விண்கலம் அன்-டாக் ஆகி பிரிந்துள்ளது.

இந்திய நேரப்படி புதன்கிழமை அதிகாலை புளோரிடா கடலில் டிராகன் ஸ்பிளாஷ் டவுன் ஆக உள்ளது. அவர்களுடன் அமெரிக்கா மற்றும் ரஷ்யாவைச் சேர்ந்த விண்வெளி வீரர்கள் இருவர் டிராகன் விண்கலம் மூலம் பூமி திரும்புகின்றனர். இதை நாசா தெரிவித்துள்ளது. இந்திய நேரப்படி அதிகாலை 3 மணி அளவில் அவர்கள் பூமியை அடைவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களது வருகையை உலக நாடுகள் எதிர்பார்த்துள்ளன.

அமெரிக்காவின் போயிங் நிறுவனம், அந்த நாட்டின் விண்வெளி அமைப்பான நாசா உடன் இணைந்து போயிங் ஸ்டார்லைனர் என்ற விண்கலத்தை உருவாக்கியது. இந்த புதிய விண்கலத்தில் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோர் ஆகியோர் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி சர்வதேச விண்வெளி மையத்துக்கு சென்றனர்.

இருவரும் 10 நாள்கள் ஆய்வு செய்துவிட்டு பூமிக்கு திரும்ப திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் ஸ்டார்லைனர் விண்கலத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு இருவரும் பூமிக்கு திரும்ப முடியாத சூழல் ஏற்பட்டது. கடந்த ஆண்டு செப்டம்பர் 7 ஆம் திகதி ஸ்டார்லைனர் விண்கலம், ஆட்கள் இன்றி வெறுமையாக பூமிக்கு திரும்பியது.

இதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு செப்டம்பர் 28 ஆம் திகதி ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் சர்வதேச விண்வெளி மையத்துக்கு அனுப்பப்பட்டது. இந்த விண்கலத்தில் 4 வீரர்களுக்கு பதிலாக இருவர் மட்டுமே சென்றனர். தற்போது சர்வதேச விண்வெளி மையத்தில் சுனிதா வில்லியம்ஸ், வில்மோர் மற்றும் டிராகன் விண்கலத்தில் அனுப்பப்பட்ட அமெரிக்க வீரர் நிக் ஹேக், ரஷ்ய வீரர் அலெக்சாண்டர் ஆகியோர் உட்பட 7 பேர் உள்ளனர்.


சுனிதா வில்லியம்ஸும், வில்மோரும் சுமார் 9 மாதங்களுக்கும் மேலாக விண்வெளியில் தங்கி உள்ளனர். அவர்களுக்கு பதிலாக புதிய வீரர்களை சர்வதேச விண்வெளி மையத்துக்கு அனுப்புவதில் தொடர்ந்து காலதாமதம் ஏற்பட்டு வந்தது.

கனடா முரசு
பக்கங்கள் 03
செவ்வாய்க்கிழமை 18.03.2025

## கியூபெக்கில் மழை வெள்ளம்; பாடசாலைகள் மூடப்பட்டன

கியுபெக்கில் பல பகுதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சில பாடசாலைகள் மூடப்பட்டன, மற்றும் வீடுகளில் வசிப்பவர்களுக்கு வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது.

02



# வெளிப்படையாகவே ஐரோப்பா பக்கம் சாய்ந்தார் கனடா பிரதமர் மார்க் கார்னி

**கனடாவின் புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மார்க் கார்னி, வெளிப்படையாகவே ஐரோப்பா பக்கம் சாய்கின்றார் என தெரியவந்துள்ளது.**

**கனடா ஒரு வட அமெரிக்க நாடு என்பது பலரும் அதிகம் யோசிக்காத ஒரு விடயம். ஆனால், கனடாவுக்கு அதிகம் தொல்லை கொடுப்பதே அமெரிக்காதான்.**

குறிப்பாக, கனடா மீது வரிகள் விதித்தும், கனடாவை அமெரிக்காவுடன் இணைப்பதாக மிரட்டியும் தொல்லை கொடுத்துவருகிறார் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்.

ஆகவே, கனடாவின் புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மைக் கார்னி, ஐரோப்பாவின் ஒத்துழைப்பை நாடுகிறார். அதற்காக அவர் இன்று பாரீஸ் மற்றும் லண்டனுக்கு பயணிக்கிறார்.

கனடா உருவான ஆரம்ப காலத்தில், கனடாவை உருவமைக்க பிரான்ஸூம் பிரித்தானியாவும் பேருதவி புரிந் தன என்பது வரலாறு.

ஆக, அமெரிக்கா இடையூறு செய்யும் நிலையில், வேண்டுமென்றே முதல் அரசுமுறைப்பயணமாக பிரான்ஸ் மற்றும் பிரித்தானியாவுக்கு செல்வதைத் தேர்ந்தெடுத்துள்ளதன் மூலம் ஐரோப்பா பக்கம் கனடா சய்வதை வெளிப்படையாக உலகுக்குத் தெரிவித்துள்ளார் கார்னி.

தான் கனடாவின் பிரதமராக பதவியேற்கும்போதே, கனடா மூன்று பிரிவு மக்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டதாக கார்னி தெரிவித்திருந்தார்.

கனடா, பிரெஞ்சு மக்கள், பிரித்தானிய மக்கள் மற்றும் பூர்வக்குடியினர் என்னும் மூன்று பிரிவு மக்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டதாக தெரிவித்த கார்னி, கனடா அடிப்படையிலேயே அமெரிக்காவிலிருந்து வித்தியாசமானது என்றும், எப்போதும், எந்த வகையிலும். கனடா அமெரிக்காவின் ஒரு பாகமாக ஆகாது என்றும் உறுதிபடத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.







# ஸ்கார்பரோவில் மதுபான நிலைய திறப்பு விழா துப்பாக்கிச் சூடு குறித்து உரிமையாளர்கள் கவலை

ஸ்கார்பரோ நகரில் தி பைபர் ஆர்ம்ஸ் என்ற மதுபான விற்பனை நிலைய திறப்பு விழாவில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் குறித்து விற்பனை நிலைய உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் அனைவரையும் அதிர்ச்சியடைய செய்திருந்தது.

மூன்று ஆயுததாரிகள் மதுபான நிலையத்துக்குள் நுழைந்து கூட்டத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்த, 12 பேர் காயமடைந்துள்ளனர். இந்த சம்பவம் கடந்த 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றிருந்தது.

12 பேர் காயமடைந்தனர். இதில் 7 பேர் நேரடியாக தோட்டாக்களால் தாக்கப்பட்டுள்ளனர், மற்றவர்கள் கண்ணாடி உடைப்பு காரணமாக காயமடைந்துள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய 3 சந்தேகநபர்களும் தப்பிச் சென்றுள்ளனர். அவர்கள் குறித்து பொலிஸ் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறது. மதுபான நிலைய உரிமையாளர்கள், இது பற்றிய ஆழ்ந்த வருத்தத்தையும், துயரத்தையும் வெளிப்படுத்தி,

02




# கனடாவுக்கு சென்று பட்டம் பெற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு

கனடாவில் பட்டம் பெற்ற வெளிநாட்டு மாணவர்களுக்கான வேலை அனுமதி விதிகள் தளர்வு செய்யப்பட்டுள்ளன என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

Post-Graduation Work Permit (PGWP) குறித்த புதிய மாற்றத்தின்படி, கனடாவில் இப்போது பட்டம் பெற்ற அனைத்து வெளிநாட்டு மாணவர்களுக்கும் வேலை அனுமதி பெற வாய்ப்பு கிடைக்கின்றது.

இதன்மூலம் தற்போது கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் பணியாற்றும் திறனைக் கூர்மைப்படுத்தி, கனடாவில் தங்கும் வாய்ப்பைப் பெற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டிற்கு முன்பு, PGWP பெற கல்லூரி மாணவர்கள் குறிப்பிட்ட பாடப்பிரிவுகளில் மட்டுமே பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்பதற்கான கட்டுப்பாடு இருந்தது.

இனி, எந்தவொரு பட்டம் பெற்றவரும் (bachelor's, master's, doctoral) PGWP இற்கு விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்கள், கனடாவில் பணியாற்றும் அனைத்து வெளிநாட்டு மாணவர்களுக்கு மிகப்பெரிய பயனளிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், திறமையான வெளிநாட்டு பட்டதாரிகளை தக்கவைத்துக்கொள்ளும் கனடாவின் முயற்சியில் இது ஒருமுக்கியமானநடவடிக்கையாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்கார்பரோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

“இந்த துயரமான சம்பவம் எங்களை மனமுடைய வைத்துள்ளது. பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்கள். அதிகாரிகள் மற்றும் மீட்பு பணியாளர்கள் துரிதமாக செயல்பட்டதற்கு நன்றியுடன் இருக்கிறோம். எங்கள் விருந்தினர்கள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பே எங்கள் முதலாவது முன்னுரிமை. விசாரணையில் முழுமையாக ஒத்துழைக்கின்றோம், உயிரிழப்பு நிகழாதது ஒரு நிம்மதியாக உள்ளது.” என்றனர்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.





## கியூபெக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொன்ரியாலின் வடகிழக்கே சுமார் 100 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ட்ரம்மொண்ட்வில் நகரில், செயின்ட்-ஃபிரான்சுவா நதி நீர்மட்டம் அதிகரித்ததால் 300 இற்கும் மேற்பட்ட வீடுகளைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்தவர்கள் தங்குவதற்காக கிரார்டின் விளையாட்டு மையத்தில் தற்காலிக முகாம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வெளியேற வேண்டியவர்கள் வீட்டின் வாயு, மின்சாரம் அணைப்பது, அத்தியாவசிய பொருள்களை மேலே நகர்த்துவது, கழிவறைகளை மூடுவது, கதவுகள் மற்றும் ஜன்னல்களை சீல் செய்வது போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.


கியூபெக் நகருக்கு தெற்கே அமைந்துள்ள போஸ்வில்லில், சாடியர் நதி கரைபுரண்டதால் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

சாடியர் நதியின் நீர் நிலை கண்காணிப்பு அமைப்பு (Système de surveillance de la rivière Chaudière) தீவிர வெள்ள எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

போஸ்இத்செமின் பாடசாலை சபையைச் சேர்ந்த (Centre de services scolaire de la Beauce-Etchemin) மூன்று பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன, மற்றும் பள்ளிப் பேருந்து சேவையும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

பொது பாதுகாப்பு அமைச்சர் பிரான்சுவா பொன்னார்டெல், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 12 இற்கும் மேற்பட்ட குடியிருப்பவர்கள் அகற்றப்பட்டுள்ளன என தெரிவித்துள்ளார்.

அத்துடன், வெள்ளம் ஏற்பட்டுள்ள பகுதிகளில் வாகன சாரதிகள் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும் என அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.




# கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னி இந்தியாவுடன் உறவை மேம்படுத்துவாரா?

கனடாவில் ஜஸ்டின் ட்ரூடோவின் 9 ஆண்டு ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.

கனடாவில் புதிய பிரதமராக மார்க் கார்னி பதவியேற்றுக் கொண்டுள்ளார்.

அண்மைக் காலத்தில் இந்தியா - கனடா இடையே உறவுகள் சுமூகமாக இல்லை. கனடாவில் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள மார்க் கார்னி இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துவார் என்று அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

கனடாவில் ஃபெடரல் தேர்தல்கள் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ளன, ஆனால் கார்னி முன்கூட்டியே தேர்தல்களை அறிவிப்பார் என நம்பப்படுகிறது.

அண்மையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அச்சுறுத்தல்களை எதிர்த்து நின்றதால், தேர்தல்களை முன்கூட்டியே நடத்துவது லிபரல் கட்சிக்கு சாதகமாக இருக்கலாம் என ஆய்வாளர்களின் கணிக்கின்றனர்.

தான் பிரதமரானால் இந்தியாவுடன் வர்த்தக தொடர்பு மீண்டும் ஏற்படுத்தப்படும் என மார்க் கார்னி அண்மையில் தெரிவித்திருந்தார். ஒத்த கருத்துடைய நாடுகளுடன் கனடாவின் வர்த்தக தொடர்புகளை விரிவுபடுத்துவது குறித்தும் அவர் பேசினார்.

“ஒத்த கருத்துடைய நட்பான நாடுகளுடன் வர்த்தக உறவை மேம்படுத்த கனடாவுக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. இந்தியாவுடன் நமது உறவை மீண்டும் கட்டமைக்க நமக்கு ஒரு வாய்ப்பு உள்ளது. இந்த வர்த்தக தொடர்புகளைச் சுற்றி இருதரப்புக்கும் பொறுப்புணர்வு இருக்க வேண்டும். நான் பிரதமராக இருந்தால், அந்த வாய்ப்பை நான் எதிர்நோக்கியிருப்பேன்.” என்றார் கார்னி.

ஜனவரியில் ஜஸ்டின் ட்ரூடோ தனது இராஜினாமாவை அறிவித்த போது, இந்திய வெளியுறவுத்துறை, கனடாவுடன் இருதரப்பு உறவை வலுவடையச் செய்வதில் உறுதியாக இருப்பதாக தெரிவித்தது.

கனடாவில் நடைபெறும் அரசியல் நிகழ்வுகள் மீது ஒரு கண் வைத்திருப்பதாக இந்தியாவின் வெளியுறவுச் செய்தித் தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால் அந்த நேரத்தில் தெரிவித்திருந்தார்.

அதே நேரம், இந்தியா - கனடா இடையே வலுவான உறவு இருப்பதாகவும். இந்த உறவுகள் தொடர்ந்து வலுவாக இருக்கும் என்று இந்தியா எதிர்பார்ப்பதாகவும், இந்த திசையில் எந்த நடவடிக்கையும் எடுக்க இந்தியா தயாராக இருக்கும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ 2023ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் குற்றம்சாட்டினார்.

இந்த குற்றச்சாட்டுகளை முழுமையாக நிராகரித்த இந்தியா அவற்றை முட்டாள்தனமானவை என்றும் உள்நோக்கம் கொண்டவை என்றும் விமர்சித்திருந்தது.

இரு நாடுகளும் தூதரக அதிகாரிகளை நாட்டை விட்டு வெளியேற்றியதுடன், தங்களது குடிமக்களுக்கு பயண ஆலோசனைகளையும் வழங்கின. இந்தியா கனடாவுக்கு அளித்து வந்த விசா சேவையை நிறுத்திவைத்தது.

இந்தியாவில் குற்றங்களுக்காக தேடப்படுபவர்களுக்கு கனடா புகலிடம் அளிப்பதாக இந்தியா கூறியிருந்தது.

இந்த குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கோ, அவர்களை மீண்டும் இந்தியாவுக்கு அழைத்து வருவதற்கோ கனடாவிடமிருந்து எந்த உதவியும் கிடைக்கவில்லை எனவும் இந்தியா தெரிவித்தது.

இந்த கசப்புணர்வுக்கு மத்தியில், இந்தியா - கனடா இடையேயான உறவு மிகவும் மோசமான நிலையை எட்டியது.

ஜஸ்டின் ட்ரூடோ பிரதமர் பதவியிலிருந்து விலகிய பின்னர், இந்தியாவுடனான உறவை கனடாவால் மேம்படுத்த முடியுமா என்பது குறித்து தற்போது சூடான விவாதம் எழுந்துள்ளது.

அஜய் பிஸாரியா கனடாவுக்கான இந்திய தூதரக உயர் அதிகாரியாக பணியாற்றியிருக்கிறார்.

ட்ரூடோவை தவிர கனடா அரசில் எந்த மாற்றமாக இருந்தாலும் அது திருப்புமுனையாக இருக்கலாம் என்றும் இரு நாட்டு உறவுகளை சீரமைக்க ஒரு வாய்ப்பாக இருக்கலாம் என்று அவர் கூறுகிறார்.

“ஆனால் அதைச் செய்ய இந்தியா அவசரப்படாது, ஏனென்றால் கனடாவில் விரைவில் தேர்தல் நடத்தப்பட வாய்ப்பு உள்ளது. மக்களின் வாக்கைப் பெற்ற புதிய பிரதமர் வந்த பின்னர்தான் இந்தியாவும், கனடாவும் பேச்சுவார்த்தை நடத்தும்,” என்கிறார் அவர்.

பிஸாரியாவின் கூற்றுப்படி, இந்திய தூதரக உயர் அதிகாரியையும், மூத்த அதிகாரிகளையும் வெளியேற்றும் இறுதி நடவடிக்கை கனடாவால் நவம்பரில் மேற்கொள்ளப்பட்டது என்பதால் பொறுப்பு தற்போது கனடாவை சேர்ந்தது.

வர்த்தகம் மற்றும் மக்கள் இடையேயான நேர்மறையான உறவுகள் அரசியல் கொந்தளிப்பால் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் இருநாடுகளுக்கிடையிலான தூதரக உறவுகள் எப்போதும் இல்லாத அளவு மோசமாக இருக்கிறது. இதுபோன்ற ஒரு சூழலில் கனடா அல்லது கனடாவின் புதிய பிரதமர் உறவுகளை சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உதாரணமாக முதல் கட்டமாக இந்திய தூதரக அதிகாரிகளை பரஸ்பரமாக பணியாற்ற அனுமதிக்க வேண்டும்.”

“ட்ரூடோ வெளியேறுவது ஒட்டுமொத்தமாக ஒரு நல்ல சந்தர்ப்பம். ட்ரூடோ உறவுகளை தனது தனிப்பட்ட பிரச்னையாக எடுத்துக்கொண்டார் என்பதுதான், இரு நாடுகளின் மோசமான உறவுகளின் சாராம்சம். எனவே இந்தியாவில் இது ட்ரூடோவின் பிரச்சினையாக பார்க்கப்பட்டது, கனடாவின் பிரச்சினையாக அல்ல”, என்று பிஸா ரியா தெரிவிக்கிறார்.